## எமது கல்லூரிக்கு இரண்டு பல்லூடக மேல்நிலை எறிகருவிகள் (Multi-Media Overhead Projectors) வழங்குவதற்கான நிதியுதவி

இன்று (07-10-2017) நடைபெற்ற அமரத்துவமாது திருமதி சாயாதேவி (ஆச்சி) செல்வராசா அவர்களது 31ம் நாள் நிகழ்வில் அவரது நினைவாக வேலணை மத்திய கல்லூரிக்கு இரண்டு பல்லூடக மேல்நிலை எறிகருவிகள் (Multi-Media Overhead Projectors) வழங்குவதற்கான முழுச்செலவையும் பொறுப்பேற்று ஆரம்ப நிதியாக 1000 டொலர்களை வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் சிரேஸ்ட உபதலைவர் திரு பொன் பஞ்சலிங்கம், நிர்வாகசபை உறுப்பினர் திரு க. பாஸ்கரன் ஆகியோரிடம் அன்னாரது அன்புக் கணவர் திரு செல்வராசா அவர்கள் வழங்கினார். இவர்களது அறஞ்சார்ந்த முன்னுதாரணமான அரிய செயலைச் சங்கத்தின் சார்பிலும் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றோம்.



அன்று எமக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் ஒருங்கே ஊட்டி வளர்த்து ஆற்றலில் சிறந்தோர்களாக்கிய எமது கல்லூரி அன்னைக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் இதுவேயாகும்.

நன்றி!

**வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா**